சுருக்கம்

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை – சிறப்புப் பள்ளிகள் – பார்வையற்றோருக்கான அரசு தொடக்கப்பள்ளி, புதுக்கோட்டை – 2017–2018ஆம் கல்வியாண்டு முதல் நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்துதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (நிலை) எண்: 18** **நாள்: 16.05.2017**
**ஹேவிளம்பி – வைகாசி, 2**
**திருவள்ளுவர் ஆண்டு, 2048**

**படிக்கப்பட்டது:**

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித ந.க. எண் 6999/சிப/2016, நாள் 10.02.2017.

--------

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் புதுக்கோட்டையில் இயங்கி வரும் அரசு பார்வையற்றோருக்கான தொடக்கப் பள்ளியானது 1975ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, உண்டு மற்றும் உறைவிட வசதியுடன் இயங்கி வருவதாகவும், இப்பள்ளியில் 50 மாணவர்களை சேர்த்து சிறப்புக் கல்வி பயிற்றுவிக்க உருவாக்கப்பட்டதாகவும், இப்பள்ளியில் தற்போது 26 பார்வையற்ற மாணவ / மாணவிகள் கல்வி பயின்று வருகிறார்கள் எனவும், இப்பள்ளியில் தொடக்கக் கல்வியை முடிக்கும் மாணவர்கள் தங்களது கல்வியைத் தொடர்வதற்கு வெளிமாவட்ட சிறப்புப் பள்ளிகளை நாட வேண்டிய நிலை உள்ளதாகவும், இதனால் மாணவர்கள் தொடர்ந்து கல்வி பயில்வது பாதிக்கப்பட்டு பள்ளி இடைநிற்றலுக்கான வாய்ப்பு ஏற்படுவதாக பள்ளியின் தலைமையாசிரியர் தெரிவித்துள்ளதாகவும், தொடக்க நிலையில் தங்கள் இருப்பிடத்தின் அருகில் உள்ள சாதாரண பள்ளியில் சேர்ந்து பயிலும் பெரும்பாலான பார்வையற்ற குழந்தைகள், நடுநிலைக் கல்விக்கு சிறப்புப் பள்ளிகளையே நாடும் நிலையும் உள்ளதாகவும், அனைவருக்கும் கல்வி திட்டத்தின் உள்ளடக்கிய கல்வியாலும், வெறும் தொடக்கப்பள்ளியாகவே இருப்பதாலும், இப்பள்ளியின் மாணவர் சேர்க்கை ஆண்டுதோறும் படிப்படியாக குறையும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

2. மேலும், பார்வையற்றோருக்காக அரசால் நடத்தப்படும் பள்ளிகளில் ஆறு பள்ளிகள் தொடக்கப்பள்ளிகளாகவே உள்ளதாகவும், மேற்படி பள்ளிக்கு 2015–2016ஆம் ஆண்டில் சொந்தக் கட்டிடம் கட்ட அரசால் ரூ.90,00,000/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டிடப் பணிகள் முடிவடைந்து, 2016–2017ஆம் கல்வியாண்டு முதல் சொந்தக் கட்டிடத்தில் செயல்பட்டு வருவதாகவும், இப்பள்ளியில் 50 மணவ / மாணவிகள் தங்கி கல்வி பயில்வதற்கு கட்டிட வசதி அமையப் பெற்றுள்ளதாகவும், நடுநிலைப் பள்ளிகளாக இயங்கும் அனைத்து அரசு சிறப்புப் பள்ளிகளிலும் சராசரியாக 40 முதல் 50 மாணவர்களே கல்வி பயின்று வருகின்றனர் எனவும், புதுக்கோட்டை அரசு பார்வையற்றோருக்கான ஆரம்ப பள்ளிக்கு ஏற்கனவே 50 மாணவர்கள் மற்றும் 5 ஆசிரியர்கள் என்ற விகிதத்தில் அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளதால், நடுநிலைப் பள்ளியாக இப்பள்ளி தரம் உயர்த்தப்படும் பட்சத்தில் அரசுக்கு எந்த விதமான கூடுதல் நிதிச்சுமையும் ஏற்படாது என புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேலும், இப்பள்ளியானது குழந்தைகள் மற்றும் பெற்றோர்கள் எளிதாக அணுகும்வண்ணம், நகரின் மையப்பகுதியில் அமையப்பெற்றுள்ளதாகவும், குழந்தைகள் தங்கிப் பயில இருபாலருக்கென தனித்தனி விடுதிகள் உள்ளன எனவும், நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்படும்போது பெற்றோர்களும் தங்களது குழந்தைகளைத் தொடர்ந்து இப்பள்ளியிலேயே தங்கி கல்வி பெற இசைவு தெரிவிப்பார்கள் எனவும், இதனால், இப்பள்ளியில் மாணவர்கள் சேர்க்கையும் அதிகரிக்க வாய்ப்பாகும் எனவும் தெரிவித்துள்ளார்.

[த.பி.பா.]

3. எனவே, மேற்கண்ட புதுக்கோட்டை அரசு பார்வையற்றோருக்கான ஆரம்பப் பள்ளியினை தரம் உயர்த்துவதால் கூடுதல் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியிடங்கள் ஏதும் தோற்றுவிக்கும் அவசியம் எழாது என்பதாலும், அரசுக்கு எந்தவிதமான கூடுதல் நிதிச்சுமையும் ஏற்படாது என்பதாலும், புதுக்கோட்டை பார்வையற்றோருக்கான அரசு தொடக்கப் பள்ளியை வரும் கல்வியாண்டு முதல் (2017–2018) நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்தி ஆணை வழங்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. மேற்படி மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று, புதுக்கோட்டை, பார்வையற்றோருக்கான அரசு தொடக்கப்பள்ளியை தரம் உயர்த்துவதால், அரசுக்கு கூடுதல் நிதிச் சுமை ஏதும் ஏற்படாது என்பதைக் கருத்திற்கொண்டு, இப்பள்ளியை 2017–2018ஆம் கல்வியாண்டு முதல் நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்தி ஆணையிடுகிறது.

5. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண் 26197/நிதி(சந)/2017, நாள் 15.05.2017–ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்
அரசு முதன்மைச் செயலாளர் (மு.கூ.பொ.)

**பெறுநர்**

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் (மு.கூ.பொ.), சென்னை–5.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
மாநில கணக்காயர், சென்னை–18/பெயரில்.
தலைமை ஆசிரியர், பார்வையற்றோருக்கான அரசு தொடக்கப் பள்ளி,
புதுக்கோட்டை – 622 001.
மாவட்ட ஆட்சித் தலைவர், புதுக்கோட்டை மாவட்டம்.

**நகல்:**

சிறப்பு நேர்முக உதவியாளர், மாண்புமிகு அமைச்சர்
(சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம்) சென்னை–9.
முதன்மைச் செயலரின் முதுநிலை தனிச் செயலர், மாற்றுத் திறனாளிகள்
நலத்துறை, சென்னை–9.
நிதித் (ச.ந.)துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்